# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| தரம் :- 10 | தமிழ் இலக்கியநயம் (விருப்பத்திற்குரியது) | நேரம் :- 3மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:............................... | 48 T | மேலதிக வாசிப்பு நேரம் :- 10 நிமிடம |

வினாத்தாள் I

**01. 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

01. பெறல் அரும் திருப்பெற்று உதவிப் பெருந்
திறன் நினைந்திலன்
(அ) “திறன்” என்பதன் பொருள் என்ன?
(ஆ) இக்கூற்றினைக் கூறியவர் யார்?

02. கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப்பொதியி தையா
(அ) “அன்புக்கயிறு” என்பது எவ்வகை அணி?
(ஆ) “கட்டுப்பொதி” என்பது யாது?

03. சம்புவின் கனி என்று
தடங்கையில் எடுத்தமுன் பார்த்தாள்
(அ) “சம்புவின்” கனி என்று அழைக்கப்படுவது யாது?
(ஆ) “தடங்கை” என்பதன் பொருள் என்ன?

04. “கிடாரிக் கன்றுக்குட்டியா இருந்தாலும் பரவாயில்லை….”
(அ) “கிடாரிக் கன்றுக்குட்டி” என்பது எது?
(ஆ) இக் கூற்றுயாரால் கூறப்பட்டது?

05. பாலைப் பண் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனதையும் மாற்றி
ஆயுதங்களைக் கீழே போடச் செய்யும்
(அ) பாலைப் பண்ணின் செயலினைக் குறிப்பிடுக?
(ஆ) பாலை நிலத்தின் தொழில் எது?

(5*4=20புள்ளிகள்)

2. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.

மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டிற்குப் போகிறான்.

மரம் புழுதியில் பூக்களையும் கழிநீரில் கனிகளையும் செய்கிறது. மனிதன் பூக்களில் புழுதியையும் கனிகளில் கழிநீரையும் செய்கின்றான்.

மனிதர்களுக்கு ஓரே ஒரு சிபி ஒரே ஒரு சீதக்காதி மரங்களில் எல்லாமே சிபிகள்: எல்லாமே சீதக்காதிகள்.

மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகிறது. மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகிறான்.

மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது: மனிதன் வலக்கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக்கொள்கிறான்.

மரம் வானத்தை நோக்கியே வளர்கிறது. மனிதன் புழுதியிலேயே புரளுகின்றான்.

மரமாகத்தான் முடியவில்லை மரங்களைப் படைக்கவாவது மனிதனுக்குத் தெரிகிறதா?

இதோ!அவன் படைத்த மரங்கள்: தூக்கு மரங்கள்,சிலுவை மரங்கள், கழுமரங்கள், கொடிமரங்கள், அத்தனையும் மாமிசப்பட்சிணி மரங்கள் மலர்களைத் தின்று முட்களை உற்பத்தி செய்யும் மரங்கள்: வெயிலை வீறியோகிக்கும் மரங்கள்.

1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வள்ளல்கள் இருவரும் யாவர்?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………..

2. மனிதன் படைக்கும் மரங்கள் எவை?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

3. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மரத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான வேறுபாடுகள் 3 தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

4. மரம் புழுதியில் பூக்களையும் கழிநீரில் கனிகளையும் செய்கிறது. மனிதன் பூக்களில் புழுதியையும் கனிகளில் கழிநீரையும் செய்கிறான். இதன் நயத்தினை விளக்குக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

(4+4+6+6=மொத்தம் 20 புள்ளிகள்)

அல்லது

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

1. ‘‘தனிமனித தத்துவமாம் இருள்’’ இங்கு இடம் பெற்றுள்ள அணி யாது?

   ………………………………………………………………………………………………

2. இங்கு இடம் பெற்றுள்ள உவமையணியினை இனங்கண்டு விளக்குக.

   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………

3. புத்தக வாசிப்பின் ஊடாகக் கிடைக்கப்பெறும் நன்மைகளாக இங்கு குறிப்பிடப்படுபவை எவை?

   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………

4. ‘‘புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்’’ இச் செய்யுளடியின் நயத்தினை விளக்குக.

   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………

(4+4+6+6=மொத்தம் 20 புள்ளிகள்)

வினாத்தாள் II

1. பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வழிகாட்டல் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா - இதில்
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா.

1 இக்கவிதை எழுந்த பின்னணி

2. கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் இடையிலான அன்பின் வெளிப்பாடு

3. தலைப்பின் பொருத்தப்பாடு

4. குழந்தையால் தந்தை அடையும் இன்பம்

4. இக் கவிதையில் காணும் கவித்துவம்

(5*6=30 புள்ளிகள் )

2. கிஷ்கிந்தைப் படலத்தில்,

(அ) இராமன் மனதில் சுக்கிரீவன்

(ஆ) வானர மகளிர் குழுவின் தோற்றம்

வெளிப்படுமாற்றினை விளக்குக. 15 புள்ளிகள்

3. தாய்ப்பசு என்ற சிறுகதையில்,

(அ)ஜீவகாருண்யம் மிக்க பசு

(ஆ)சுயநலம் மிக்க மனிதர்

எடுத்துக்காட்டப்படும் முறையை விளக்குக. 15 புள்ளிகள்

4 வாய்மொழிப்பாடல் எனும் பகுதியில்

(அ) மருத்துவிச்சியின் மனப்பாங்கு

(ஆ) கிராமிய மண்வாசனை

வெளிப்படும் முறையினை விளக்குக. 15 புள்ளிகள்

5 மென்மையே வாழும் எனும் பத்தி எழுத்தில்

(அ) மென்மையானது விரைவில் அழிந்துவிடும் வன்மையானது அழியாது என்ற கூற்றுக்கு முரணாக பத்தி எழுத்தாளர் கூறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. 15 புள்ளிகள்

## விடைகள்

வினாத்தாள் I

01 1. (அ) நன்றி அல்லது தகுதி (ஆ) இராமன்

2. (அ) உருவகஅணி (ஆ) கட்டுச்சாதம் அல்லது உணவுப்பொதி

3. (அ) நாவற்பழம் (ஆ) அகன்ற கை அல்லது பெரியகை

4. (அ) பசுக்கன்று (ஆ) பால்காரன் அல்லது வழிப்போக்கன்

5. (அ) வழிப்பறிக்கொள்ளைக்காரர்களின் கொடிய மனதையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போடச் செய்யும் (ஆ) கொள்ளை அடித்தல் அல்லது வழிப்பறி

02. 1. சீதக்காதி, சிபி

2. தூக்குமரங்கள், சிலுவை மரங்கள், கழுமரங்கள், கொடி மரங்கள்,மாமிசப்பட்சிணிமரங்கள்,மலர்களைத்தின்று முட்களை உற்பத்தி செய்யம் மரங்கள்

4போதுமானது

3. மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டிற்குப் போகிறான்.

மரம் புழுதியில் பூக்களையும் கழிநீரில் கனிகளையும் செய்கிறது. மனிதன் பூக்களில் புழுதியையும் கனிகளில் கழிநீரையும் செய்கின்றான்.

மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகிறது. மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகிறான்.

மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது: மனிதன் வலக்கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக்கொள்கிறான்.

மரம் வானத்தை நோக்கியே வளர்கிறது. மனிதன் புழுதியிலேயே புரளுகின்றான்.

3போதுமானது

5. மரம் அழுக்கு நிறைந்தாலும் தன் அழுக்கை மறைத்த அழகிய பூக்களைத் தருகின்றன.மனிதன் அந்த அழகிய பூவிற்கு அழுக்கினை சேர்க்கின்றான்.(இரசாயனகலவைகளைப் போடுதல் ) அதேபோல் மரம் அழுக்க நீரினை உண்டாலும் சுவையான பழங்களைத் தருகின்றன.மனிதன் சுவையான பழங்களை எடுத்து நீண்ட நாள் பாவனைக்காக பதப்படுத்தி கழிநீர் செய்கின்றான். குடிபானம்

அல்லது

1. உருவக அணி
   தனிமனித தத்துவமாகிய இருள்
2. மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
   உவமானம் : வானம்
   உவமேயம் : மனோபாவம்
   பொதுத்தன்மை : விரிவு அல்லது பரந்த தன்மை
   உருபு : போல

3. மனிதரிடையே அன்பு உருவாகும்
   மனோபாவம் விரிவடையும்
   தனிமனித அகங்காரம் நீங்கும்

எல்லா மக்களும் ஒன்று என உணரப்படும்
புதுவாழ்வு பெறும்

4. மக்களின் மனங்களில் உள்ள அழுக்குகள் நீங்கி புனிதம் பெற்று வாழ்க்கையில் ஓர் மாற்றத்தை உண்டு பண்ண வேண்டுமெனில் நாட்டின் எங்கும் புத்தகங்கள் வேண்டும்.